# connect2research

**Holland Bloorview** ஆராய்ச்சி அறிவித்தல் திட்டம் பற்றிய கேள்வி & பதில்

Holland Bloorview வைத்தியசாலையில் சேவை பெறும் சேவைபெறுநர்களின் மின்னியல் முறையிலான ஆரோக்கிய பதிவேட்டில் காணப்படும் பிறந்த திகதி, மருத்துவ நிலையின் உறுதிப்பாடு, தொடர்பு கொள்வதற்கான தகவல் ஆகியன போன்ற மட்டுப்படுத்திய தகவலுடன் இணைப்பினை உடையதாக, காப்புநிலை கொண்ட ஒரு தரவுத் தளம்(database) **connect2research** என்ற பெயருடன் இங்கு உள்ளது. ஓர் ஆராய்ச்சி ஆய்வுக்குத் தகைமை கொண்டவர்களாக இருக்கலாம் என்று அறியப்படும் (கடந்த கால அல்லது நிகழ்கால) சேவைபெறுநர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரை அடையாளம் கண்டு அவர்களை Holland Bloorview ஆராய்ச்சியாளர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளச் செய்வதற்கு இத் தரவுத் தளம் உதவுகிறது. ஒரு சேவைபெறுநரின் ஆரோக்கிய பதிவேடு பாதுகாப்புடன் பேணப்படும் தகவலாக இருப்பதுடன் உங்கள் பராமரிப்புக் குழுவில் அடங்கி உள்ள, அதிகாரம் பெற்றவர்களை தவிர வேறு எவரும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அப்பதிவேட்டினை பார்க்க முடியாது.

Holland Bloorview வைத்தியசாலையில் தற்பொழுது சேவைகளைப் பெறுகின்ற சேவைபெறுநர்கள் எல்லோரும் தன்னியல்பாகவே இந்த **connect2research** தரவுத்தளத்தில் சேர்க்கப்படுகின்றனர் என்றபோதிலும், சேவைபெறுநர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் எந்த நேரத்திலும் இப்பதிவில் இருந்து சுயவிருப்பத்தின் பிரகாரம் வெளியேற முடியும். இதற்கு எம்மை அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் (416) 425-6220 தொடரெண் 3000 அல்லது மின்னஞ்சல் முகவரி connect2research@hollandbloorview.ca ஆகும். **connect2research** தரவுத் தளத்தில் உங்கள் பெயரும் அடங்கச் செய்வது /அடங்கச் செய்யாமல் விடுவது அல்லது ஓர் ஆராய்ச்சி ஆய்வில் நீங்கள் பங்குபற்றுவது அல்லது அதனைத் தவிர்ப்பது ஆகியன பற்றிய உங்கள் தீர்மானம், Holland Bloorview வில் நீங்கள் பெறுகின்ற பராமரிப்பு அல்லது சேவைகளை பாதிக்கமாட்டாது.

*உங்கள் தனிமறைவு நிலையை(privacy) பாதுகாப்பதிலும் உங்கள் தகவலினைக் காப்புநிலையில் வைத்திருப்பதிலும் Holland Bloorview வைத்தியசாலை மிகத் தீவிரமான ஈடுபாடு காட்டி வருகிறது. தனிப்பட்ட ஆரோக்கியத் தகவல் பாதுகாவல் சட்டத்துக்கு (Personal Health Information Protection Act /PHIPA) அமைவாக, ஆரோக்கிய பராமரிப்பு தொடர்பிலான தகவல்கள் யாவும் இங்கு மிகத் தீவிரமான முறையில் அந்தரங்கமாக, காவற்படுத்தப்பட்ட நிலையில் பாதுகாப்பாகப் பேணப்பட்டு வருகின்றன. தனிமறைவு நிலை தொடர்பிலான எந்தவொரு கேள்விக்கும் தயவுசெய்து தனிமறைவு நிலைக்*

*காரியாலயத்துடன் (Privacy Office) (416) 425-6220 தொடரெண் 3467 தொலைபேசி எண்ணில் அல்லது privacy@hollandbloorview.ca மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.*

---

கேள்வி & பதில்


1. ஆராய்ச்சி என்றால் என்ன? ஆராய்ச்சியில் பங்குபற்றுவதில் உள்ள நன்மைகள் எவை
2. connect2research என்பது என்ன? இதனை connect2care என்பதில் இருந்து எவ்வாறு வேறுபடுத்த முடிகிறது
3. connect2research இன் தேவை என்ன
4. நான் Holland Bloorview வைத்தியசாலையில் பெறும் பராமரிப்பினை connect2research பாதிக்குமா
5. சேவைபெறுநர்கள் connect2research தரவுத் தளத்தில் தம்மைப் பதிவு செய்வார்களா அல்லது தன்னியல்பாக சேவைபெறுநர்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா
6. connect2research தரவுத்தளத்தில் இருந்து நான் எப்படி வெளியேற முடியும்?
7. நான் connect2research தரவுத் தளத்தில் இருந்து வெளியேறும் பொழுது நடப்பது என்ன
8. connect2research தரவுத்தளத்தில் யாரெல்லாம் சேர்க்கப்படுவார்கள்
9. உங்கள் தனிமறைவு நிலையை நாங்கள் எப்படி உறுதி செய்து வைத்திருக்கிறோம்
10. connect2research தரவுத்தளம் எப்படிச் செயற்படுகிறது
11. connect2research தரவுத்தளம் ஆரோக்கிய பதிவேட்டினை அணுகிப் பெறும் தகவல் எவ்வாறானது
12. connect2research தரவுத்தளத்தில் தகவலைத் தேடக் கூடியவர்கள் யார்
13. ஆராய்ச்சிக் குழுக்கள் எவ்வாறான தகவலைப் பார்வையிடுவர்
14. ஓர் ஆராச்சிக் குழுவிடம் இருந்து அழைப்புகளை நான் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை எதிர்பார்க்கலாம்
15. connect2research என்பது ஒரு ஆராய்ச்சி ஆய்வு எனக் கருதலாமா
16. ஆராய்ச்சி முயற்சியில் நான் பங்குபற்றத்தான் வேண்டுமா
17. connect2research பற்றிய மேலதிக தகவலினை நான் பெறுவதாயின் அல்லது அதனைப் பற்றிய கருத்துரைகளை வழங்குவதாயின் எங்கே அவ்வாறு செய்ய முடியும்


**Q. ஆராய்ச்சி என்றால் என்ன? ஆராய்ச்சியில் பங்குபற்றுவதில் உள்ள நன்மைகள் எவை?**

A: ஆராய்ச்சி என்பது வலுக்குறைவுகள், தொழில் நுட்பங்கள் மற்றும் சிகிச்சைகள் பற்றி நாங்கள் மேலும் அறிந்து கொள்வதற்கு உதவுவதுடன், எமது பிள்ளைகள், இளைஞர், குடும்பங்கள் எல்லோருக்கும் மிகவும் அர்த்தமுள்ள ஆரோக்கியமான எதிர்காலங்களை நாம் கட்டியெழுப்ப எமக்குத் துணை நிற்பதற்கும் முடியும். வலுக்குறைவுகளுடன் வாழ்ந்துவரும் பிள்ளைகளின் வாழ்வினை சேவை பெறுநர் மற்றும் குடும்பங்களை மையமாகக் கொண்ட புனர்வாழ்வு ஆராய்ச்சி மூலமாக உயர்த்துவதற்கு Bloorview வைத்தியசாலை தீவிரமாக முயன்று வருகிறது. வலுக்குறைவுகளுடன் வாழும்

பிள்ளைகள் மற்றும் இணைஞர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோருக்கு மேலான நன்மைகள் தரும் விளைவுகளும் இடையீட்டுச் சிகிச்சை முறைகளில் முன்னேற்றங்களும் எமது ஆராய்ச்சியின் விளைவாக ஏற்பட்டுள்ளன

ஆராய்ச்சி ஆய்வு ஒவ்வொன்றும் வித்தியாசமானதாக அமைந்து இருக்கும். இவற்றில் சிலவற்றில் கருத்துக் கணிப்புகள், நேர்முக உரையாடல்கள் மற்றும் பரிசோதனைகள் அடங்கி இருக்கும். மற்றையவற்றில் உடல் பயிற்சிச் செயற்பாடு, ஆராய்வு முறையிலான மருந்துகள் மற்றும் தொழில்நுட்பங்கள் அடங்கி இருக்கலாம். இவற்றில் எந்த ஆராய்ச்சி ஆய்வு தமக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் சேவைபெறுநரையும் அவரது குடும்பத்தினரையும் சார்ந்த ஒன்றாக இருக்கும். ஓர் ஆராய்ச்சி ஆய்வில் பங்குபற்றுவதால் நேரடியான நன்மைகள் உங்களுக்குக் கிடைக்கலாம் அல்லது அப்படிக் கிடைக்காமலும் போகலாம். உதாரணமாக சில ஆய்வுகளில் வாகனம் நிறுத்தும் சலுகை அல்லது சிலவற்றில் நீங்கள் பங்குபற்றியமைக்கு நன்றியாக ஒரு சிறிய பரிசு அடையாளமாக வழங்கப்படலாம். வேறு சில ஆயிவுகளில் இவை கிடைக்காமலும் போகலாம் .

**Q. connect2research என்பது என்ன? இதனை connect2care என்பதில் இருந்து எவ்வாறு வேறுபடுத்த முடிகிறது?**

A: connect2care என்பதும் **connect2research** என்பதும் Holland Bloorview வைத்தியசாலையின் இருவேறு தனித்துவமான சேவை ஏற்பாடுகளாகும்:

- **connect2care** என்பது கணினி வழியாகப் பயன்படுத்துகின்ற ஒரு கருவிமுறையாகும். இதன் மூலமாக Holland Bloorview சேவை பெறுநர்களும் அவர்களது குடும்பங்களும் தமது ஆரோக்கிய பராமரிப்புத் தகவல், ஆரோக்கிய பதிவேடுகள், சந்திப்பு நியமனங்கள் மற்ற சிகிச்சை ரீதியான வைத்தியக் குறிப்புகள் ஆகியவற்றை ஒரு நாளில் 24 மணிநேரமும், ஒரு வாரத்தின் 7 நாட்களும் பூரணமாகப் பார்வையிட முடிகிறது. Learn more

- **connect2research** என்பது காவல் நிலை அடங்கிய ஒரு தரவுத் தளம் ஆகும். வைத்தியசாலையின் ஆராய்ச்சி ஆய்வு ஒன்றில் பங்குபற்றலாம் என்று கருதப்படும்(கடந்த கால அல்லது நிகழ்கால) சேவைபெறுநர்களை Holland Bloorview ஆராய்ச்சியாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு படுத்துகிறது. இத்தரவுத் தளம் Holland Bloorviewவை பெறுநர்களின் மின்னியல் ஆரோக்கிய பதிவேட்டில் உள்ள பிறந்த திகதி, வைத்திய நிலை உறதிப்பாடு, தொடர்புக்கான தகவல் போன்ற மட்டுப்படுத்திய தகவலுடன் தொடர்பு கொண்ட தரவுத் தளமாக இது அமைந்துள்ளது. சேவைபெறுநர்கள் ஆய்வுக்கு ஆய்வு எனத் தனித்தனியாகக் கருத்துக்கு எடுத்து ஆராய்ச்சியில் பங்குபற்றுவது பற்றித் தீர்மானத்தை எடுக்க முடியும். Learn more

**Q. connect2research இன் தேவை என்ன?**

A: ஓர் ஆராய்ச்சியில் பங்குபற்றுவதற்கான நாட்டம் என்பது சம்பந்தப்பட்ட ஆரோக்கிய சேவை நிறுவனம், அது சேவை வழங்கும் சேவைபெறுநர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகத்துப் பங்காளர்கள் ஆகியோருடன் மெய்யான தொடர்புகளையும் உறவுகளையும் கட்டியெழுப்புவதில் தங்கியுள்ளது என்று நாம் நம்புகிறோம். Holland Bloorview வைத்தியசாலையில் நடைபெறும் புதிய ஆராய்ச்சி பற்றி மேலதிகமாக அறிய விரும்பும் அல்லது அதில் பங்குபற்ற விரும்பும் சேவைபெறுநர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் யாவரும் தமது அறிவினை அதிகரிப்பதற்கும் சம அளவில் தகவலினைப் பெறுவதற்கும் **connect2research** உதவியாக இருக்கும் . Holland Bloorview வைத்தியசாலையில் நடைபெறும் புதுமையான ஆராய்ச்சி பற்றி விழிப்புணர்வு பெறவும், அதில் பங்குபற்றவும் விரும்பும் கூடுதலான சேவைபெறுநர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு **connect2research** சந்தர்ப்பம் வழங்கும்.

**Q: நான் Holland Bloorview வைத்தியசாலையில் பெறும் பராமரிப்பினை connect2research பாதிக்குமா?**

A: இல்லை. **connect2research** தரவுத் தளத்தில் உங்கள் பெயரும் அடங்கச் செய்வது /அடங்கச் செய்யாமல் விடுவது பற்றிய உங்கள் தீர்மானம் மற்றும் ஓர் ஆராய்ச்சி ஆய்வில் நீங்கள் பங்குபற்றுவது /பங்குபற்றாமல் விடுவது போன்ற காரணங்களால், நீங்கள் Holland Bloorview வில் பெறுகின்ற பராமரிப்பு அல்லது சேவைகள் பாதிக்கப்படுவது இல்லை.

**Q. சேவைபெறுநர்கள் connect2research தரவுத் தளத்தில் தம்மைப் பதிவு செய்வார்களா அல்லது தன்னியல்பாக சேவைபெறுநர்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?**

A: 2011மே மாதம்1ம் திகதிக்குப் பின்பாக Holland Bloorviewவில் சிகிச்சை பெற்றவர்களாகவும் 21 வயதிலும் அதற்குக் குறைவாகவும் உள்ள சேவைபெறுநர்கள் மற்றும் கடந்த இரண்டு வருடகாலத்தில் Holland Bloorview வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்களாகவும் 22 முதல் 28 வயது கொண்ட சேவைபெறுநர்கள் தன்னியல்பு முறையில் **connect2research** தரவுத் தளத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். தாமாகவே சுயவிருப்பத்தின்படி அவர்கள் இப்பதிவில் இருந்து வெளியேறி இருக்காத நிலைமையில் இவ்வாறு நடைபெறும். **connect2research** தரவுத்தளக் காரியாலயம் உங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் அணுகிமுறைத் தொழில்நுட்பங்கள் போன்ற மேலதிகமான கட்டாயமற்ற தகவலினையும் உங்கள் அனுமதியுடன் பெறக்கூடும்.

**Q. connect2research தரவுத்தளத்தில் இருந்து நான் எப்படி வெளியேற முடியும்?**

A: நீங்கள் எந்த நேரத்திலும் இப்பதிவில் இருந்து வெளியேற முடியும். இவ்வாறு வெளியேறுவதற்குத் தயவுசெய்து **connect2research** காரியாலயத்துடன் தொலைபேசி எண் (416) 425-6220 தொடரெண் 3000 வழியாக அல்லது மின்னஞ்சல் connect2research@hollandbloorview.ca. மூலம் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுடைய ஆரோக்கிய பராமரிப்பு குழுவினர் ஒருவரிடமும் நீங்கள் தரவுத் தளத்தில்

இருந்து வெளியேற விரும்புவதாகத் தெரிவித்தால் அவர் உங்கள் சார்பாக **connect2research** காரியாலயத்திற்கு அறிவிப்பார்.

**Q. நான் connect2research தரவுத் தளத்தில் இருந்து வெளியேறும் பொழுது நடப்பது என்ன?**

A: நீங்கள் **connect2research** திட்டத்தில் இருந்து வெளியேறும் பொழுது நாங்கள் **connect2research** திட்டத்தின் தரவுத் தளத்தில் இருந்து உங்களை அகற்றி விடுவோம். இச்சமயத்தின் பின்பு புதிதாகத் தயாரிக்கப்படும் எந்தவொரு புதிய ஆட்சேர்ப்பு அறிவிப்புப் பட்டியலிலும் உங்கள் பெயர் **சேர்க்கப்பட மாட்டாது**. எதிர்காலத்தில் புதிதாக வரும் ஆராய்ச்சி ஆய்வு எதற்கும் நீங்கள் தகைமை பெற்றிருந்தாலும் ஆராய்ச்சியாளர்கள் உங்களுடன் **தொடர்பு கொள்ள மாட்டார்கள்**.

Holland Bloorview வைத்தியசாலையில் தோன்றும் ஆராய்ச்சி வாய்ப்புகள் பற்றி அறிவதற்கு நீங்கள் **connect2research** தரவுத்தளத்தில் எந்நேரமும் பதிவு செய்து கொள்ளலாம், அல்லது Participate in Research என்ற இணையத்தளம் சென்று பார்க்கலாம்.

நீங்கள் வெளியேற முன்பாக ஒரு Holland Bloorview ஆராய்ச்சியாளரிடம் உங்கள் பெயரும். தொடர்பு இலக்கமும் கொடுக்கப்பட்டு இருந்தால், ஒரு புதிய ஆராய்ச்சி திட்டம் பற்றிய தொலைபேசி அழைப்பு அல்லது கடிதம் வழியான தகவல் தொடர்ந்தும் உங்களுக்கு வரலாம்.

**Q. connect2research தரவுத்தளத்தில் யாரெல்லாம் சேர்க்கப்படுவார்கள்?**

A: எமது **connect2research** திட்டத்தின் முதலாவது கட்டத்தில் (phase one) Holland Bloorview வைத்தியசாலையில் 2011மே மாதம்1ம் திகதிக்குப் பின்பாக சிகிச்சை பெற்றவர்களாக 21 வயதுக்கும் அதற்குக் குறைவாகவும் உள்ள சேவைபெறுநர்கள் அல்லது Holland Bloorview வைத்தியசாலையில் கடந்த இரண்டு வருடங்களில் சேவை பெற்றவர்களாக 22 முதல் 28 வயதுடைய சேவைபெறுநர்கள், **connect2research** திட்டத்தில் இருந்து வெளியேறாத நிலைமையில் இருப்பவர்கள், பதிவு செய்யப்படுவர்.

**connect2research** திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில்(phase two) குடும்பங்கள் உடன்பிறந்தோர். பணியாளர்கள், மாணவர்கள், சிகிச்சையாளர்கள் மற்றும் சமூகத்து அங்கத்தவர்கள் ஆகியோருக்கான ஒரு புதிய பிரிவு உண்டாக்கப்பட்டு, அவர்களிடம் புதிய ஆராய்ச்சி வாய்ப்புகளில் பங்குபற்ற அழைக்கப்படுவதை விரும்புவார்களா என்று கேட்கப்படும்.

**Q. உங்கள் தனிமறைவு நிலையை நாங்கள் எப்படி உறுதி செய்து வைத்திருக்கிறோம்?**

A: Holland Bloorview's வைத்தியசாலையின் **connect2research** தரவுத்தளம் ஆராய்ச்சியில் பங்குபற்றுநரை ஆள்சேர்க்கும் விடயத்தில் தனிப்பட்ட ஆரோக்கிய பாதுகாவல் சட்டத்துக்கு (*Personal Health Information Protection Act, 2004* /PHIPA) பூரணஅமைவாக அதனைப் பின்பற்றி தொழிற்படுகிறது. ஒரு சேவைபெறுநரின் ஆரோக்கிய பதிவேடு பாதுகாப்புடன் பேணப்படும் தகவலாக இருப்பதுடன் உங்கள் பராமரிப்புக் குழுவில்

அடங்கி உள்ள, அதிகாரம் பெற்றவர்களை தவிர வேறு எவரும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அப்பதிவேட்டினை பார்க்க முடியாது.

**Q. connect2research தரவுத்தளம் எப்படிச் செயற்படுகிறது?**

A: இந்த **connect2research** திட்டத்தில் அடங்கியுள்ள தரவுத்தளம், வைத்தியசாலையின் அங்கீகாரம் பெற்ற, காப்புநிலை கொண்ட ஒரு மென்பொருளை உபயோகித்து, அதன் மூலம் Holland Bloorview வில் பேணப்படும் சேவைபெறுநரின் மின்னியல் முறையிலான ஆரோக்கிய பதிவேட்டில் காணப்படும் மட்டுப்படுத்திய தகவலுடன் தொடர்பு கொண்டதாக உள்ளது. இத் தரவுத்தளம் குறித்த ஒரு ஆய்வுக்குரிய தேடல் வரையறைகளை **connect2research** காரியாலயத்தினர் பதிவு செய்வதற்கு அனுமதிக்கிறது. குறித்த ஆய்வுக்குரிய வரையறைகளுடன் பொருந்துகின்ற சேவைபெறுநர்களின் பட்டியல் ஒன்றினை தரவுத்தளம் உருவாக்கி வழங்கும். குறித்த தேடல் வரையறைகளுடன் பொருந்துகின்ற சேவைபெறுநர்களின் பெயர் மற்றும் தொடர்புத் தகவல் ஆகியவை மட்டுமே Bloorview ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்படும்.

Holland Bloorview ஆராய்ச்சியாளர் ஒருவர் உங்களைத் தொலைபேசியில் அழைத்து அல்லது தகவலினைக் கடிதம் மூலமாக அனுப்பி, நீங்கள் குறித்த ஆராய்ச்சி ஆய்வு அல்லது செயல்திட்டம் பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா என்று கேட்கலாம். நீங்கள் இச்சந்தர்ப்பத்தில் ஆய்வுக்கு ஆய்வு என்ற அடிப்படையில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப அதில் பங்குபற்றவோ அல்லது மறுக்கவோ முடியும்.

**Q: connect2research தரவுத்தளம் ஆரோக்கிய பதிவேட்டினை அணுகிப் பெறும் தகவல் எவ்வாறானது?**

A: குறித்த ஒரு ஆராய்ச்சி ஆய்வில் பங்குபற்றுவதற்குத் தகைமை கொண்டவர்களாக இருக்கும் சேவைபெறுநர்களை அடையாளம் காணுவதற்கு **connect2research** தரவுத்தளம் பின்வரும் விபரங்களை தேடல் வரையறைகளாகப் பயன்படுத்துகிறது:

- விபர அட்டை எண்
- முதல் மற்றும் கடைசிப் பெயர்
- பிறந்த திகதி
- உயிரியல் முறைப் பால்
- வீட்டு முகவரி
- முதன்மைத் தொடர்பு
- தொலைபேசி எண்
- மேற்கோள் தொடர்புக்கான காரணம்
- நோய்நிலை உறுதிப்பாடு
- நோய்நிலை உறுதிப்பாட்டுத் திகதி
- பாரிய அசைவுச் செயற்பாடு வகையீட்டுத் தொகுதி (GMFCS) மட்டம்
- எவ்வித சிகிச்சை நிலையங்கள்/திட்டங்கள் சேவைபெறுநர் அணுகியுள்ளார்
- பேசப்படும் மொழிகள்
- மொழிபெயர்ப்பு உரையாளர் தேவை (ஆம்/இல்லை)

**Q. connect2research தரவுத்தளத்தில் தகவலைத் தேடக் கூடியவர்கள் யார்?**

A: **connect2research** காரியாலயம் மற்றும் ஆராய்ச்சி நீதிநெறிச் சபை (Research Ethics Board /REB) அங்கீகாரம் வழங்கிய Holland Bloorview ஆராய்ச்சிக் குழுக்கள் ஆகியன **connect2research** தரவுத் தளத்தினை அணுகிப் பயன்படுத்தும் உரிமையினை ஆய்வுக்கு ஆய்வு என்ற அடிப்படையில் பெற்றுள்ளன. **connect2research** தரவுத் தளத்தினை பயன்படுத்தும் ஒவ்வொருவரும் அதற்கான பயிற்சி நெறியினை முடித்து இருக்க வேண்டும். சேவைபெறுநர்களின் தனிமறைவு நிலை, தனிப்பட்ட ஆரோக்கிய தகவல் ஆகியவற்றை பாதுகாப்பதற்காக, தகவலை அணுகுதல், பெறுதல், சேமித்தல் ஆகியன தொடர்பிலான நிறுவனக் கோட்பாடுகளை இவர்கள் பின்பற்றிச் செயற்பட வேண்டும்.

**Q. ஆராய்ச்சிக் குழுக்கள் எவ்வாறான தகவலைப் பார்வையிடுவர்?**

A: ஒரு ஆராய்ச்சி ஆய்வுக்குரிய குறித்த தேடல் வரையறைகளுக்குப் பொருந்துகின்ற சேவைபெறுநர்களுக்கு உரிய **பெயர்கள் மற்றும் தொடர்புத் தகவல் ஆகியன மட்டுமே** Holland Bloorview ஆராய்ச்சியாளருக்கு வழங்கப்படும். **connect2research** தகவல் தளத்துக்கும் Holland Bloorview வைத்தியசாலையைச் சேர்ந்த எந்த ஒரு தனிநபருக்கும் இடையில் தனிப்பட்ட முறையிலான ஆரோக்கிய தகவல் எதுவும் பரிமாறப்பட மாட்டாது.

**Q. ஓர் ஆராச்சிக் குழுவிடம் இருந்து அழைப்புகளை நான் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை எதிர்பார்க்கலாம்?**

A: ஓர் ஆராய்ச்சிக் குழு உங்களை எத்தனை நாட்களுக்கு ஒரு முறை தொடர்பு கொள்ளலாம் என்பது, Holland Bloorview வைத்திய சாலையில் நிகழும் ஆய்வுகளின் தெரிவு வரையறைகளில் தங்கி இருக்கும். ஒரு மாதத்தில் சில தடவைகள் உங்களுடன் அவர்கள் தொடர்பு கொள்ளக் கூடும் அல்லது ஒரு தடவையேனும் அது நிகழாமல் போகலாம். Holland Bloorview வைத்தியசாலையில் உள்ள ஏறத்தாழ 16,000 சேவைபெறுநர்கள் ஆராய்ச்சி பற்றி கற்பதற்கும் பங்களிக்கவும் **connect2research** தரவுத்தளம் வசதி வழங்குகிறது.

இவ்வைத்தியசாலையில் உள்ள பல்வேறு ஆராய்ச்சி ஆய்வுகளின் கீழ் ஒரு சேவைபெறுநரை அல்லது குடும்பத்தை எத்தனை தடவைகள் தொடர்பு கொள்ளலாம் என்று **connect2research** தரவுத்தளம் கட்டுப்பாடு விதிக்கவில்லை. ஏனெனில் சேவைபெறுநர்களும் குடும்பங்களும் எவ்வாறான ஆய்வுகள் பற்றிக் கேட்டு அறியவும் பங்குபற்றவும் விரும்புகின்றனர் என்ற விடயத்தில் அவர்களுக்கு தெரிவு செய்யும் உரிமை இருக்கவேண்டும் என்ற நாம் நம்புகிறோம். உங்களுடன் மிக அதிக தடவைகள் தொடர்பு கொள்ளுகின்றனர் என நீங்கள் கருதினால் தயவுசெய்து **connect2research** காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**Q: connect2research என்பது ஒரு ஆராய்ச்சி ஆய்வு எனக் கருதலாமா?**

A: இல்லை. **connect2research** என்பது ஒரு ஆராய்ச்சி ஆய்வு இல்லை. புதிய ஆராய்ச்சி வாய்ப்புகள் பற்றி அறிவதற்குத் தகைமை உடைய (கடந்த கால அல்லது

Bloorview RESEARCH INSTITUTE | Holland Bloorview Kids Rehabilitation Hospital

நிகழ்கால)சேவைபெறுநர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களுக்கும் இவ்வைத்தியசாலைக்கும் இடையே தொடர்பாடலை ஏற்படுத்தும் ஒரு ஆராய்ச்சி அறிவித்தல் தரவுத் தளமாகவே இது உள்ளது.

**Q: ஆராய்ச்சி முயற்சியில் நான் பங்குபற்றத்தான் வேண்டுமா?**

A: இல்லை. உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் நீங்கள் எந்த ஒரு ஆராய்ச்சி ஆய்விலும் பங்கு பற்ற வேண்டிய அவசியம் இல்லை. ஓர் ஆராய்ச்சி ஆய்வில் நீங்கள் பங்குபற்றுவது பற்றி எடுக்கும் உங்கள் தீர்மானம் மற்றும் **connect2research** தரவுத் தளத்தில் உங்கள் பெயரும் அடங்கச் செய்வது /அடங்கச் செய்யாமல் விடுவது போன்ற காரணங்களால், நீங்கள் Holland Bloorview வில் பெறுகின்ற பராமரிப்பு அல்லது சேவைகள் பாதிக்கப்படுவது இல்லை.

**Q. connect2research பற்றிய மேலதிக தகவலினை நான் பெறுவதாயின் அல்லது அதனைப் பற்றிய கருத்துரைகளை வழங்குவதாயின் எங்கே அவ்வாறு செய்ய முடியும்?**

A: **connect2research** திட்டம் பற்றி ஏதாவது கேள்விகள் அல்லது கரிசனங்கள் உங்களிடம் இருக்குமென்றால் நீங்கள் பின்வரும் வழிகளைப் பின்பற்றலாம்:

1. எமது இணையத்தளத்திற்கு சென்று பாருங்கள்: hollandbloorview.ca/connect2research
2. **connect2research** காரியாலயத்துடன் தொலைபேசி இலக்கம் (416) 425-6220 தொடரெண் 3000 வழியாகத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது மின்னஞ்சல் அனுப்புங்கள்: connect2research@hollandbloorview.ca
3. உங்கள் கருத்துரையின் இயல்பினைப் பொறுத்து நீங்கள் Holland Bloorview வைத்தியசாலையின் தனிமறைவு நிலைக் காரியாலயத்துடன் (Privacy Office) தொலைபேசி இலக்கம் (416) 425-6220 தொடரெண் 3467 வழியாகத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது மின்னஞ்சல் அனுப்புங்கள்: privacy@hollandbloorview.ca